DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE,CHEYYAR

CASE NO. SC. No. 68/2024

Prosecution witness PW - 4

| | | |
|---|---|---|
| Name | …. | மனோகரன் |
| Husband/Father's Name | .... | எம்.எல்.மணி |
| Village | .... | |
| Taluk | .... | |
| Caste | .... | |
| Calling | .... | |
| Religion | .... | |
| Age | …. | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of 27th day of January 2026.

(எதிரிகள் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் முனுகபட்டு கிராமத்தில் வசித்து வருகிறேன். டிராக்டர் ஓட்டுநராக உள்ளேன். ஆஜர் எதிரிகள் வெங்கடேசன், சுரேஷ், ஜெகன் மற்றும் தரணி ஆகியோர்களை தெரியும். எதிரிகள் அனைவரும் முனுகபட்டை சேர்ந்தவர்கள். லோகநாதன் என்பவர், மகேஷ் என்பவர் தூக்கு மாட்டிக்கொண்டதாக சொன்னார். அதன்பிறகு நான் சம்பவ இடம் சென்று பார்த்தேன். சம்பவ இடத்தில் போலிசார் விசாரணை செய்தார்கள். பின்பு சம்பவ இடத்தில் போலிசார் மாதிரி வரைபடம் தயார் செய்தனர், போலிசார் தயாரித்த பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது. மேற்படி பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடன் சீனிவாசன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தார். கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது. மேற்படி கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>1, 2, 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவத்திற்கு முன் தினம் அ.சா.1 வீட்டின் முன்பு இரவு 8.00 மணிக்கு பேசிக்கொண்டு இருந்ததை பார்த்தீர்களா என்றால் பார்க்கவில்லை. நானும், ராமதாஸம் மகேஷ் வீட்டில் இருக்கும்போது வெங்கடேசன், மகேஷ் வீட்டிற்கு வந்தார் என்றால் வந்தார்கள் மற்றும் 10 நிமிடம் பேசிக்கொண்டு இருந்தார்கள், அவர்கள் என்ன பேசினார்கள் என்று தெரியாது. சம்பவ இடத்திற்கு நான் எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் காலை 9.00 மணிக்கு சென்றேன். போலிசார் என்னிடம் கையொப்பம் வாங்கும் போது சுமார் 9.30 அல்லது 10.00 மணி இருக்கும். கையொப்பம் வாங்கும் போதே எதிரிகளை அழைத்து சென்றார்களா என்றால் 12.00 மணிக்கு அழைத்து சென்றார்கள். எதிரிகளை அழைத்து சென்ற பிறகு காவல்நிலையம் சென்றீர்களா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் கையொப்பம் இட்டது மட்டும் தான், வேறு எதுவும்தெரியாது. இறந்தவரின் அம்மா வசந்தா எனக்கு அத்தை முறை ஆவார். மேற்படி ஆவணங்களில் கையொப்பம் போட உறவுக்காரர் யாரேனும் உள்ளார்களா என்றார்கள் அதனால் போட்டேன். இறந்து போன நபரின் அம்மா வசந்தா எனக்கு அத்தை முறை என்பதால் மேற்படி ஆவணங்களில் காவல் நிலையத்தில் கையொப்பம் இட்டுவிட்டு, சம்பவ இடத்தில் கையொப்பம் இட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(3 ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது. )**

Taken down by me in open Court and read over / interpreted to the witness in the presence of the accused and admitted by him / her to be correct.

Sd/- N.Suresh
**Assistant Sessions Judge,**
**Cheyyar.**